ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1957/23 - 2016 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2016.03.11

*1957/23 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்***

***செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7, 11, 22(1) மற்றும் 30 (5) ஆம் நியதிகளிலான அனுமதி***

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயமான) 7 ஆம், 11 ஆம் பிரிவுகள், பிரிவு 22 இன் உபபிரிவு (1) மற்றும் பிரிவு 30 இன் உபபிரிவு (5) என்பவற்றின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் இலங்கை அரசால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான கொள்வனவு, உரிமை மாற்றல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பின்வரும் வகையான ஆட்களுக்கும் அவ்வாறான வகை ஆட்களால் அல்லது அவர்களுக்கு முறிகளை ஏற்றுமதி செய்வதற்கும் இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.*

(i) *1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட முதன்மை வணிகர்கள்;*

(ii) *இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரஜைகள்;*

(iii) *இலங்கைக்கு வெளியே அவர்களின் நிரந்தர வதிவிடத்தை ஏற்படுத்திக் கொண்ட இலங்கைப் பிரஜைகள்;*

(iv) *தொழில் புரிவதற்கு அல்லது வியாபாரத்தை அல்லது தொழில்சார் நிறுவனத்தை நிறுவுவதற்கு இலங்கைக்கு வெளியே சென்ற இலங்கைப் பிரஜைகள்;*

(v) *இலங்கை தவிர்ந்த ஏனைய நாடொன்றின் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள்;*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(vi) செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட ஒப்புதல் தொடர்பில் அவ்வாறான காப்புறுதிக் கம்பனிகளால் வர்த்தக வங்கிகளில் பேணப்படுகின்ற விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு எதிராக இலங்கை அபிவிருத்தி முறிகளின் சகல கொள்வனவுகளும் பற்று வைக்கப்படுமிடத்து, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்;

(vii) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள் போன்றவற்றைக் கொண்டிருப்பவர்கள்;

(viii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற முகவர்கள்;

(ix) வெளிநாட்டு நாணயங்களில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்;

(x) இலங்கைக்கு வெளியே அவர்களின் நிரந்தர வதிவிடம் என்பதனை நிரூபித்த அத்தகைய பிரஜைகளிற்கு வழங்கப்பட்ட இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள இலங்கைப் பிரஜைகள்.

2001, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1208/14 ஆம் இலக்க மற்றும் 2008 யூலை மாதம் 23 ஆந் திகதிய 1559/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2016, மாச்சு 11.

4 - 388

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.